**அசல் வழக்கு எண் : 143/2018**

**நாள்: 07.02.2026**

**பி.வா.சா.1–, தங்கராசு த/பெ. சின்னசாமி**

வாதி மற்றும் வாதியின் வழக்கறிஞர் ஆஜர். பிரதிவாதிகளுக்கான வழக்கறிஞர் ஆஜர்.

**சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் பி.வா.சா.1–ன் குறுக்கு விசாரணை**

1. வாதி ஆனந்தி நிலமும் எனது நிலமும் அருகருகில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தான மெணசி கிராம சர்வே எண்.130/3எ நிலம் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எங்களுக்கும் எனது பெரிய தாத்தாவான ராஜிகவுண்டர் என்பவருக்கும் பாத்தியப்பட்டதாகும். வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் 2 ஏக்கர் 66 சென்ட் நிலம் ஆகும். 2 ஏக்கர் 66 சென்ட் நிலத்திற்கான ஆவணம் எதுவும் எனது பெயரிலோ எனது தந்தை பெயரிலோ உள்ளதா என்றால் இல்லை. எனது தாத்தா பெயரில் மேற்படி நிலத்திற்கான ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. 2 ஏக்கர் 66 சென்ட் நிலத்தில் பேர்பாதி ( 1 ஏக்கர் 25 -1/2 சென்ட் ) நிலத்தை ஆனந்தி என்பவரும் மீதி பாதி நிலத்தை மாயக்கண்ணன் என்பவரும் வாங்கியுள்ளனர் என்றால் சரிதான்.

2. இவ்வழக்கு சொத்தானது பரமசிவம் என்பவரின் மகன்களான தென்னரசு மற்றும் இளையரசு ஆகியோர் கிரயம் பெற்ற சொத்துக்கள் என்றால் சரிதான். தென்னரசு இளையரசு ஆகியோருக்கு அவரின் தந்தை கொடுத்த சொத்து என்றால் அவரது தாத்தா ராஜிகவுண்டர் கொடுத்த சொத்தாகும். அந்த சொத்தை ராஜிகவுண்டர்தான் அனுபவித்து வந்தார் என்றால் 1 ஏக்கர் 76 சென்ட் நிலத்தை ராஜிகவுண்டர் என்பவரும் மீதமுள்ள 90 சென்ட் நிலத்தை எனது தாத்தா, அதன் பிறகு எனது தந்தை, அதன் பிறகு நான் அனுபவித்து வருகிறேன். மேற்படி சொத்தை நான் அனுபவித்து வருவதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி 90 சென்ட் நிலத்திற்கான பட்டாவை எனது பெயரில் பெறுவதற்காக நான் ஏதேனும் முயற்சி மேற்கொண்டேனா என்றால் இல்லை. மேற்படி சொத்துக்கள் முழுவதற்கும் ( 2 ஏக்கர் 66 சென்ட்) மாயக்கண்ணன் மற்றும் ஆனந்தி ஆகியோரின் பெயரில்தான் ஆவணம் உள்ளது என்றால் சரிதான். ஆனந்தி மற்றும் மாயக்கண்ணன் மேற்படி சொத்துக்களை கிரயம் பெற்றதை அடுத்து பாதைக்கென ஒரு பகுதி நிலத்தை ஒதுக்கினார்கள் என்றால் சரிதான். அவ்வாறு ஒதுக்கப்பட்டதை அடுத்து மேற்படி பாதைக்காக புல எண்ணானது மெணசி கிராம புல எண். 130/3 ஏ 4 என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாதை நிலமானது ஆனந்தி மற்றும் மாயக்கண்ணன் ஆகியோரின் பெயரில் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான்.

3. வாதி கிரயம் பெற்ற முழு நிலத்திற்கும் பட்டா வழங்கப்படாது குறைவான நிலத்திற்குதான் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியான மாயக்கண்ணன் என்பவருக்கு எவ்வளவு நிலத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் 80-1/2 சென்ட் நிலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மீதி நிலத்திற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் ஜானகி, தென்னரசு மற்றும் இளையரசு ஆகியோர் பெயரில் உள்ளது. ஜானகி, தென்னரசு மற்றும் இளையரசு ஆகியோருக்கு 2 ஏக்கர் 66 சென்ட் நிலத்தை தவிர வேறு ஏதேனும் நிலம் இருந்ததா என்றால் தாவா சர்வே எண்ணில் உள்ள நிலத்தை தவிர வேறு புல எண்ணில் நிலம் உள்ளது. ஜானகி, தென்னரசு மற்றும் இளையரசு ஆகியோர் பெயரில் பட்டா இருப்பதாக தெரிவித்துள்ளேன், மேற்படி நிலமானது தற்போது யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் எனது அனுபவத்தில் உள்ளது. ஜானகி, தென்னரசு மற்றும் இளையரசு ஆகியோர் தாவா சொத்தை ஆனந்திக்கு விற்பனை செய்த தினத்தில்தான் மாயக்கண்ணனுக்கும் விற்பனை செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்தானது வாதிக்கு விற்பனை செய்த கிரய ஆவணத்திலும் " எங்களுக்கு தந்தையின் தந்தை தாத்தா வழி சொத்து " என கிரய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. தாவா சொத்தை வாதி கிரயம் பெற்ற பிறகு அவருக்கு எவ்வளவு நிலம் கொடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு

தெரியுமா என்றால் 80-1/2 சென்ட் நிலம் கொடுக்கப்பட்டது. அதனை அடுத்து புல எண்ணானது சர்வே எண்.130/3ஏ2 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி இவ்வழக்கை தாக்கல் செய்தபின்னர் இவ்வழக்கு சொத்தானது எனது பாத்தியத்தில்தான் உள்ளது என கூறி நான் எதிரிடை பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தானது எனது சுவாதீனத்தில் இல்லை என்றாலும் இவ்வழக்கு சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. பட்டாவானது ஒரு சொத்தினுடைய உரிமை ஆவணம் இல்லை என்றாலும் கிரய ஆவணம்தான் ஒரு சொத்தினுடைய உரிமை ஆவணம் ஆகும் என்றாலும் சரிதான். மேற்படி கிரய ஆவணமானது பட்டாவின் அடிப்படையில்தான் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பட்டாவானது தென்னரசு மற்றும் இளையரசு ஆகியோரின் பெயரில் இருந்த காரணத்தினால்தான் அதனடிப்படையில் அந்த கிரய ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதியானவர் கடந்த 2001ம் ஆண்டு தாவா சொத்தினுடைய உண்மையான உரிமையாளர்களிடமிருந்து கிரயம் பெற்று தற்போதுவரை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்து நான் சுவாதீனத்தில் இருப்பதாக கூறுவதும் தாவா சொத்துக்கான பட்டா தவறுதலாக வழங்கப்பட்டுள்ளதாக நான் கூறுவதும் தவறு என்றால் சரியல்ல. உண்மையில் தாவா சொத்தில் எனக்கு உரிமை இருந்திருந்தால் தென்னரசு மற்றும் இளையரசு ஆகியோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொண்டிருப்பேன் என்றால் அந்த அளவிற்கு படிப்பறிவில்லை. தாவா சொத்தை வாதியானவர் முறையாக கிரயம் பெற்று அனுபவித்து வருவதினால் அதனை தடை செய்வதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால் கிரயம்தான் பெற்றுள்ளார். தாவா சொத்தின் அனுபவத்தில் அவர் இல்லை. ஆகையால் வாதி கோரியுள்ளவாறு இவ்வழக்கானது வாதிக்கான செலவுத்தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**சாட்சியானவர் பிரதிவாதி தரப்பில் மறுவிசாரணை செய்யப்படவில்லை.**

SARANYA M

Digitally signed by SARANYA M
Date: 2026.02.07 16:36:03 +0530